DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சின்னராஜ் |
| Father's Name | துரைசாமிகவுண்டர் |
| Village | இருணாப்பட்டு, கொல்லை கொட்டாய் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | விவசாயம் |
| Age | 52 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of 12.02.2026

**EP. No. 53/2020** **எ.ம.சா.2** **11.49 PM – 12.11 PM**

**குறுக்கு விசாரணை–**

1. இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் ராமன் எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் ஆவார். அவர் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துவிட்டு சென்றுள்ளார் என்றால் சரிதான். இந்த நிறைவேற்று மனுவானது மனுதாரரின் சுவாதீனத்தை நான் பயிர் இடுவதை தடுப்பதாக மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. எனக்கும் ராமனுக்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. இந்த மனு சொத்தான 89 சென்ட் நிலத்தில் நாங்கள் அத்துமீறி மனுதாரரின் சுவாதீனத்தை தடுக்க கூடாது என மூன்று நீதிமன்றத்தில் தீர்ப்பாகி உள்ளதுஎ என்றால்சரிதான். மனுதாரர்களை மனு சொத்தில் பயிர் இட விடாமல் நாங்கள் தடுத்தோம் என காவல் நிலையதில் புகார் ஒன்று அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

3. ராமன் அவருடைய குறுக்கு விசாரணையில் குரிசிலாப்பட்டு காவல் நிலைய அதிகாரி மனு சொத்திற்கு வந்து பார்வையிட்டார என கூறியிருப்பது சரியா தவறா என்றால் தவறு. மனுதாரர் அளித்த புகாரின் பேரில் போலிசார் வந்து விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் ஆமாம் நாங்கள் காவல் நிலையம் சென்றோம்.

4. மனுதாரர்கள் மனு சொத்தில் தற்போது வரை பயிர் எதுவும் செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்றால் நாங்கள் பயிர் செய்து வருகிறோம். நாங்கள் அப்படி பயிர் செய்து வருவதற்கு இந்நீதிமன்றத்தில் எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் என் வாக்கீலிடம் கொடுத்து தாக்கல் செய்துள்ளோம் என சாட்சி கூறுகிறார்.

5. 1ம் மனுதாரர் காசிநாதன் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் நாங்கள் அடித்து காலி செய்துவிடுவோம் என மிரட்டியதாக தெரிவித்துள்ளோம் என்றால் சரியல்ல அது தவறு. மனு சொத்து மனுதாரர்களை மிரட்டி பயிர் செய்யவிடாமல் கரம்பாக வைத்துள்ளோம் என்று சொன்னால் தற்போது எங்களால் பயிரிடப்பட்டு இருக்கிறது.

6. மனு சொத்தில் உள்ளே நுழைந்து தெந்தரவு செய்யக்கூடாது என்ற தீர்ப்பாணைக்கு விரோதமாக நாங்கள் செயல்பட்டு இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்திற்கு இருபுறமும் மனுதாரர்களின் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய சொத்தும் மனுசொத்தை ஒட்டி உள்ளது என்றால் சரியல்ல.

7. ராமன் அவருடைய குறுக்கு விசாரணையில் எங்களுக்கு பாத்தியப்பட்ட ஒரு சொத்தானது மனு சொத்தை ஒட்டி உள்ளது  என சாட்சியம் அளித்துள்ளார், அது சரியா தவறா என்றால் அது வேறு நபருடைய சொத்தை நாங்கள் பயிர் செய்து வருகிறோம் அது எப்படி எங்கள் சொத்து என கூறமுடியும் என சாட்சி கூறுகிறார். என்னுடைய முதன்மை விசாரணையில் எதிர்மனுதாரர்கள் ஆகிய நாங்கள் தடை செய்யவில்லை என தெரிவித்திருக்கிறோம், மனுதாரர்கள் அவர்களுடைய சொத்தை அனுபவிக்க எங்களுக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை என்று சொன்னால் என்னுடைய அப்பா மனு சொத்தில் சிறிது காலம் முன்பு பயிர் செய்து வந்தார், பின்னர் நாங்கள் தொடர்ந்து பயிர் செய்து வருகிறோம்.

8. மனு சொத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணைக்கு நாங்கள் கட்டுப்படுகிறோமா என்றால் சாட்சி அதற்கு மேல்முறையீடு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டோம் என கூறுகிறார். மேற்படி மேல்முறையீடு வழக்கானது தற்போது என்ன நிலையில் உள்ளது என தற்போது நிலுவையில் உள்ளது, அந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால்  2026ம் வருடம் ஜனவரி மாதத்தில் வக்கீலிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேன்.  மேற்படி

வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வக்கீலிடம் கொடுத்துள்ளேன்.

9. நானும் மற்ற எதிர்மனுதாரர்களும் சேர்ந்து மனுதாரர்களை அவர்களுடைய மனு சொத்தை அனுபவிக்க நாங்கள் தடை செய்து வருகிறோம் அதனால் தான் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 29.01.2020 தேதியில் ராமன், சின்னராஜ் மற்றும் திருப்பதி ஆகிய மூன்று பேரும் சேர்ந்து மனு சொத்தை பயிரிடவிடாமல் தடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல.

10. நாங்கள் அவர்களை மிரட்டி தாகாத வார்த்தையால் திட்டியதால் மனுதாார்கள் பயந்து வந்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் மீண்டும் மனுதாரர்களை மனு சொத்தில் நுழையவிடாமல் தடுத்ததால் கடந்த 30.01.2020 அன்று குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. நாங்கள் நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் அவமதிப்பதால் நாங்கள் அனைவரும் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.